# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

03.10.2020 சனிக்கிழமை


## போதையில் தகராறு: குடும்பஸ்தர் சிகிச்சையில்

சாவகச்சேரி, ஒக்.3
குடும்பஸ்தர் ஒருவர் போத் தலால் குத்தப்பட்டுப் படுகாயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சாவகச்சேரி, கச்சாய் வீதியில் நடந்துள் ளது. அதே இடத்தைச் சேர்ந்த சிவனேஸ்வரன் ஜெகதீஸ்வரன் (வயது 31) என்பவரே படு காயமடைந்துள்ளார்.

2

## புதினம் தெரியுமோ

மந்திகை வைத்தியசாலையில் நடந்த சம்பவம் ஒண்டுதான் இண்டைக்குச் சொல்லப்போறன் கண்டியளே. போன ஞாயிற்றுக்கிழமை தொண்டைமானாறில மயங்கி விழுந்த ஒருத்தரை மந்திகை வைத்தி ய சாலைக்குக் கொண்டு போயிருக்கினம். அங்கை கொண்டு போறதுக்குள்ள அவர் இறந்திட்டார் என்று வைத்தி யர்கள் சொல்லிப் போட்டினம். அதில

2

# புங்குடுதீவில் பூசகர் கோரமாக கொலை!



நள்ளிரவில் பயங்கரம்

யாழ்ப்பாணம், செப் 3
யாழ்ப்பாணம், புங்குடுதீவில் பூசகர் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று இரவு நடந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் பூசகரின் உத வியாளர் மற்றும் இரு பூசகர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

2

# மாகாண தேர்தலுக்கு தயாராகின்றது அரசு

## 'பட்ஜட்' நிறைவேறிய கையோடு மாகாண சபை சட்டத்தில் திருத்தம்

கொழும்பு, ஒக்.3

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு தயாராகி வரும் அரசு, மாகாண சபைத் தேர்தல் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளையும் செய்து வருகின்றது என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

2

## மகன் தாக்கியதில் தந்தை உயிரிழப்பு

சாவகச்சேரி, ஒக்.3
மகனால் தாக்கப்பட்ட தந்தை ஒரு வர் சிகிச்சை பயனின்றி உயிரிழந் துள்ளார். மட்டுவில், சந்திரபுரத் தைச் சேர்ந்த சண்முகம் சந்திரசேக ரம் (வயது71) என்பவரே உயிரிழந் துள்ளார். இவர் கை முறிந்த நிலை யில், காயங்களுடன் நேற்று இரவு வீதியோரம் மீட்கப்

2



## 20க்கு ஆதரவாக பல்டியடித்த ஐவர்

கொழும்பு, செப்.3
அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைவுக்கு முழு மையான ஆதரவு வழங்கப்படும் என்று ஸ்ரீலங்கா சுதந்தி ரக்கட்சி அரசுக்கு உறுதியளித்துள்ளது.
20ஆவது திருத்தச்சட்டவரைவு தொடர்பில் ஆராய்வதற் காக அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தலைமையில் சுதந்திரக் கட்சி அண்மையில் குழுவொன்றை அமைத்தி ருந்தது.
அந்தக் குழுவானது 20க்கு முழு ஆதரவையும் வழங்கவேண் டும் என்ற பரிந்துரையை முன்வைத்துள்ளது என்றும், அதனடிப்படையில் கட்சியின் தீர்மானத்தை ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு சுதந்திரக்கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரியப்படுத்தியுள்ளார் எனவும் அறியமுடிகின்றது. அதேவேளை, இலங்

2



## ரிஷாட் –சமல் சந்திப்பால் தெற்கு அரசியல் கொதிப்பு

கொழும்பு, ஒக்.3
அமைச்சர் சமல் ராஜபக்சவும், நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனும் புன்னகையுடன் பேசிக்கொள்ளும் ஒளிப்படங்கள் தெற்கில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளன. ரிஷாட் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பி

2

## வெளிநாட்டு ஒப்பந்தங்கள்: முழுநாள் விவாதம்

கொழும்பு, ஒக்.3
நாடாளுமன்றத்தில் எதிர்வ ரும் 8ஆம் திகதி "வெளி நாட்டு ஒப்பந்தங்கள்" தொடர்பான முழுநாள் விவா தம் நடத்தப்படவுள்ளது. எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளர் லக்ஷமன் கிரியெல்ல விடுத்த வேண் டுகோளின்படி "வெளி நாட்டு ஒப்பந்தங்கள்" தொடர்பான ஒத்திவைப்பு விவாதத்துக்கு முழு நாளை யும் ஒதுக்குவதற்கு அரச கட்சி இணக்கம் வெளியிட்டுள்ளது.

2

# மாகாண தேர்தலுக்கு...

அனைத்து மாகாண சபைகளுக்கும் ஒரே நாளில் தொகுதி வாரியாகத் தேர்தலை நடத்துவதற்கான சட்ட ஏற்பாடுகளை கடந்த அரசு மேற் கொண்டிருந்தது. ஆனால் எல்லை நிர்ணயத்தில் ஏற்பட்ட சிக்கல்களால் தேர்தலை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் நடத்த முடியா மல் போனது.
தற்போது பழைய முறைப்படி அதாவது விகிதாசார விருப்புவாக்கு அடிப்படையில் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. அதற்கான தடைகளை நீக்கும் நோக்கிலேயே மாகாண சபைத் தேர்தல் சட்டம் திருத்தப்படவுள்ளது.
அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்ட வரைவு நிறைவேறிய பின்னர் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை அரசு நாடாளு மன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளது.
வரவு செலவுத் திட்டம் நிறைவேறிய பின்னரே ஜனவரி முதல் வாரத் தில் மாகாண சபைத் தேர்தல் சட்டம் திருத்தப்படவுள்ளது. அதனால் ஏப்ரல் மாதத்துக்குள் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-44)

# புங்குடுதீவில்...

புங்குடுதீவு ஊரதீவு சிவன் கோவில் பூசகரான ரூபன் சர்மா (வயது33) என்பவரே அவரது வீட்டில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
நேற்று இரவு வீட்டில் பூசகரும், அவரது உதவியாளரும் இருந் துள்ள னர். நள்ளிரவு முகங்களை மூடியவாறு வந்த சிலர் பூசகரைக் கட்டி வைத்துத் தாக்கியுள்ளனர் என்று கூறப்படு கின்றது. தாக்குதல் நடத்தியவர்களால் வீட்டில் இருந்த பாதுகாப்புக் கமராக்கள் அடித்து நொருக்கப்பட்டுள்ளது டன், பாதுகாப்புக் கமராப் பதிவுகள் அடங்கிய சேமிப்பகத் தையும் கொண்டு சென்றுள்ளனர்.
வீட்டில் வெளிப்புறங்களிலும் இரத்தக்கறை காணப்படு கின்றது. பூசகரின் கைகள் கட்டப்பட்டு அவர் தாக்கப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டமைக்கான அடையாளங்களும் காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். பூசகரின் உதவியா ளரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.(எ-26)

# போதையில்...

மதுபோதையில் இருவருக்கு இடையே ஏற்பட்ட தகராறில் ஒருவர் மற்றையவர் மீது போத்த லால் குத்தப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. படுகாயமடைந்தவர் யாழ்ப்பா ணம் போதனா மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.(எ-9)

# மகன் தாக்கியதில்...

பட்டார். அவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப் பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்துள்ளார். மகனின் தாக்குதலிலேயே அவர் காயம டைந்தமை விசாரணைகளில் தெரியவந்ததை அடுத்து சாவகச் சேரி பொலிஸார் மகனைக் கைது செய்துள்ளனர். (எ-9,26)

# 20க்கு ஆதரவாக....

கைத் தொழிலாளர் காங்கிரஸ் (சேவல் சின்னம்), தேசிய காங்கிரஸ் (குதிரை சின்னம்) , தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி (கப் பல்) ஆகியனவும் '20' ஐ ஆதரிக்கும் முடிவை ஆளுங்கட்சிக்கு தெரியப்படுத்தியுள்ளன.
அதேவேளை, எதிரணி உறுப்பினர்கள் ஐவர் அரசுடன் இணைவது உறுதி என சிங்கள வாரஇதழொன்று செய்திவெளியிட்டுள்ளது. அவர்களை வளைத்துப்போடும் நடவடிக்கையில் பஸில் ராஜபக்ச களமிறங்கியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.(எ-44)

# ஜோன்ஸ்டனுக்கு எதிரான வழக்கு தள்ளுபடி

கொழும்பு, ஒக்.3
இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ வுக்கு எதிராக தாக்கல் செய்யப் பட்ட வழக்கு, சட்டத்துக்கு முரணானது எனத் தெரிவித்து கொழும்பு மேல் நீதிமன்றம் வழக்கைத் தள்ளுபடி செய் துள்ளது.
2010 2014 ஆம் ஆண்டு வரை வர்த்தக அமைச்சராக இருந்த ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சதொச நிறுவனத்தின் 153 ஊழியர்களை அவருடைய அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி, அரசாங்கத்துக்கு 4 கோடி ரூபா நஷ்டத்தை ஏற்ப டுத்தியதாகக் குறிப்பிட்டு நல்லாட்சி அரசாங்கத்தின் போது, இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் வழக் குத் தாக்கல் செய்யப்பட்டது.
இந்த வழக்குத் தாக்கல் செய் யப்பட்ட முறைமையானது சட்டத்துக்கு முரணானது எனத் தெரிவித்து ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட பிரதிவாதிகள் சார்பில், முன்னி லையாகியிருந்த சட்டத்தரணி கள் கொழும்பு நீதிவான் நீதி மன்றத்தில் அடிப்படை எதிர்ப்பை வெளியிட்டிருந்த போதிலும், அதனை நிரா கரித்து அந்த வழக்கை விசார ணைக்கு எடுத்துக்கொள்ள நீதிமன்றம் தீர்மானித்தது.
அந்த தீர்மானத்துக்கு எதிராக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கொழும்பு மேல் நீதிமன்றத்தில் எதிர் மனுத்தாக் கல் செய்திருந்தார். (ந-இ)

# ரிஷாட் –சமல் சந்திப்பால்...



னர்களை அரசாங்கத்துடன் இணைத்துக்கொள்ளக்கூ டாது என ஆளும் கூட்டணியின் பங்காளிக்கட்சிகளும், சிங்கள தேசியவாத அமைப்புகளும் மீண்டும் வலியுறுத் தியுள்ளன.
வன்னிக்கு பயணம் மேற்கொண்டிருந்த அமைச்சர் சமல் ராஜபக்ச, ரிஷாட்டை சந்தித்தபோது புன்னகையுடன் வரவேற்று உரையாற்றினார். இது தொடர்பான புகைப் படம் வெளியானதும் சமூகவலைத்தளங்களில் கடும் விமர்சனங்கள் எழுந்தன. தேர்தல் காலத்தில் ரிஷாட்டை விமர்சித்தவர்கள், 20 ஆவது திருத்தச்சட்டவரைபுக்காக அவரை நாடுகின்றனர் என்ற கோணத்திலும் சொற்க ணைகள் தொடுக்கப்பட்டுவருகின்றன.
அத்துடன், எதிரணிகளும் அரசின் இரட்டை முகம் அம்பலமாகியுள்ளது என குற்றஞ்சாட்டிவருகின்றனர். இந்நிலையில் 20 தொடர்பில் தமது கட்சி நிலைப்பாட்டை அறிவிக்காமல் ரிஷாட் பதியுதீனின் கட்சி மௌனம் காத்துவருகின்றது. இதனால் அக்கட்சி அரசுடன் இணையக்கூடும் என்ற ஊகமும் வெளியிடப் பட்டுள்ளது.
இவ்வாறானதொரு பின்புலத்திலேயே ரிஷாட் வந்தால் விரட்டியடிப்போம் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.
அதேபோல் ரிஷாட் பதியுதீன் இருக்கும் அரசில் தான் இருக்கப்போவதில்லை என்று தூய ஹெல உறுமயவின் தலைவர் அமைச்சர் உதய கம்மன்பிலவும் ஏற்கனவே கூறியிருந்தார்.
"அரசுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் இருப் பதால் ஆதரவு தேவையில்லை. எதிரணியில் இருந்து வேண்டுமானால் சட்டமூலங்களுக்கு ஆதரவு வழங்க லாம்." என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டுள்ளார்.
அதேவேளை, ரிஷாட்டை இணைத்துக்கொண்டால் சிங்கள மக்களின் ஆதரவை இழக்க நேரிடும் என்று அரசுக்கு சிங்கள தேசியவாத அமைப்புகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இதற்கிடையில் ஆளுங்கட்சிக்கு ஆதரவு திரட்டும் நோக்கில் தான் ரிஷாட்டை சந்திக்க வில்லை என சமல் ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார்.(எ-44)

# வெளிநாட்டு ஒப்பந்தங்கள்...

இதன்படி விவாதம் முற்பகல் 10 மணி முதல் மாலை 4.30 மணி வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.
அதேவேளை சபாநாயகர் மஹிந்தா யாப்பா அபே வர்தன தலைமையில் நேற்றுக் கூடிய நாடாளுமன்ற வணிகக் குழு, அடுத்த நாடாளுமன்ற கூட்டங்களை எதிர் வரும் செவ்வாய்க்கிழமை தொடங்கி 2020 ஒக்ரோ பர் 9ஆம் திகதி வரை நடத்த முடிவு செய்தது.(எ-44)

## புதினம் தெரியுமோ

ஒண்டும் இல்லை. அதுக்குப் பிறகுதான் பெரிய சில்லெடுப்பா போட்டுதாம் கண்டியளே.
வைத்தியசாலையில இருந்து உடலை வெளிய எடுக்கப் பட்டபாடு பெரும்பாடு எண்டு சொந்தக்காரங்கள் கதைச்சிச்சினம்.
மந்திகை வைத்தியசாலையில இருக்கிற சட்டவைத்திய அதிகாரி முல்லைத்தீவிலையும் வேலை செய்யிறார்.
அண்டைக்கு அவர் அலுவலா முல்லைத்தீவுக்குப் போயிற்றார். இங்கை இறப்பு விசாரணை அதிகாரி தன்ர அலுவலை முடிச்சிட்டு சட்ட வைத்திய அதிகாரி வருவார் எண்டு போயிட்டார். சட்ட வைத்திய அதிகாரி முல்லைத் தீவில இருந்து அப்ப வருவார், இப்ப வருவார் எண்டு சொல லியிருக்கினம். ஆனால் அவருக்கு அங்கையும் முக்கிய விபத்து விசாரணை இருந்ததால அவரால்யும் சரியான நேரத்துக்கு வர முடியலை. அவரிலையும் பிழை இல்லத்தான்.
அடுத்த நாள் ஹர்த்தால் எண்டதால உடலை உடனை கொண்டு போக வேண்டிய கட்டாயத்திலை சொந்தக்காரங் கள் அந்தரப்பட்டிருக்குதுகள். பிறகு ஒரு மாதிரி யாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரியோட கதைச்சு உடலை இரவு கொண்டுபோய் சேர்த்திருக்கினம் கண்டியளே.
இப்பிடி ஆக்களை நியமிக்காமல் ஒராளுக்கு பல இடங்களிலை வேலைக் கொடுக்கிறதாலை சனங்கள் சரியா கஸ்டப்படுதுகள் கண்டியளே. மரத்தால விழுந்தவையை மாடு ஏறி மிதிச்சது போல, ஏற்கனவே கவலையில இருக்கிற சனத்த கஸ்டப்படுத்திறது சரியில்லை கண்டியளே. சம்பந்தப்பட்ட ஆக்கள் இதைக் கவனத்தில எடுத்து சனத்துக்கு சரியான முறையில சேவை கிடைக்க நடவடிக்கை எடுக்கோனும் எண்டுறது சனத்திட்ட கோரிக்கை பாருங்கோ. பட்சி



# கிளி. வைத்தியசாலையில் உலக சிறுவர் தினம்

கிளிநொச்சி, ஒக்.3

கிளிநொச்சி வைத்தியசாலையில் சர்வதேச சிறுவர் தினம் ஒக்டோபர் 1 அன்று வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. "வளமான சிறார்களின் வளர்த்தெடுப்பு எதிர் காலத்திற்கான முதலீடு" எனும் தொனிப் பொருளில் இந்த நிகழ்வு அமைந்திருந்தது.

வைத்தியசாலையின் சிறுவர் விடுதியில் இருந்த சிறுவன் கேக் வெட்டி இந் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். அன்றைய தினம் வைத்தியசாலையில் இருந்த மற்றும் வைத்தியசாலைக்கு வருகைதந்த சிறார்கள், பெற்றோர்கள் மற்றும் வைத்திய சாலை ஊழியர்கள், பிள்ளைகள் உட்பட பலரும் கலந்து விளையாடி மகிழ்வுற்றனர்.

சிறார்களுக்கான போட்டிகள் வைக்கப் பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. நிகழ்வின் இறுதியில், கலந்துகொண்ட அனைத்து சிறுவர்களுக்கும் பரிசுப் பொதிகள் வழங்கப்பட்டன.

உடல், உள மற்றும் சமூக ஆரோக்கியம் நிறைந்த சிறார்களை உருவாக்கவல்ல அன்பான, அழகான வீட்டுச் சுற்றாடலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய அவசியத்தை கலந்துகொண்ட பெற்றோர் ஏற்றுகொண்டு உறுதிபூண்டனர். (ந-316)

# 524 பேர் விடுவிப்பு

கொழும்பு, ஒக்.3

தனிமைப்படுத்தலை முழுமையாக நிறைவு செய்த 524 பேர் இன்று சனிக்கிழமை விடுவிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் முப்படையினரால் பராமரிக்கப் பட்டு வரும் 6 தனிமைப்படுத்தப்பட்ட நிலையங்களில் இருந்து இவர்கள் விடுவிக் கப்பட்டுள்ளனர்.

எனினும் 7 ஆயிரத்து 37 பேர் தொடர்ந்தும் 79 தனிமைப்படுத்தல் நிலையங்களில் உள்ளனர்.

இதேவேளை இன்று காலை வெளிநாடுகளில் இருந்து நாட்டுக்கு வருகை தந்த 470 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அவர்களும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். (க-இ)

# உணவுப் பாதுகாப்பு நகரமாக பத்தரமுல்லை

கொழும்பு, ஒக்.3

பத்தரமுல்லை நகரத்தை உணவுப் பாதுகாப்பு நகரமாக மாற்றுவதற்கு விசேட வேலைத் திட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

பத்தரமுல்லை சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் மற்றும் கடுவெல நகர சபை இணைந்து இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ், வர்த்தக நிலையங்களைப் பரிசோதிக்கும் நடவடிக்கைகள் இந்த வருடம் முழுவதும் மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளன.

இதுவரை 150க்கும் அதிகமான வர்த்தக நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 70 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்கள் செய்யப்பட்டுள்ளன.

இந்த வேலைத்திட்டத்தின் மூலம், நகரத்தில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களையும் தரப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்று சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தினர் தெரிவித்துள்ளனர். (க-இ)

# மாங்குளம் விபத்து: ஒருவர் படுகாயம்

வவுனியா, ஒக்.3

மாங்குளம் பகுதியில் நேற்றிரவு நடைபெற்ற வீதி விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

முச்சக்கரவண்டி ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் நின்ற மரத்துடன் மோதியதியதாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்து யாழ் கண்டி பிரதான வீதியில் மாங்குளத்திற்கு அண்மையில் நேற்றிரவு ஒன்பது மணிக்கு இடம்பெற்றுள்ளது.

இதன்போது பணிக்கன் குளம் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞன் படுகாய மடைந்தநிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந-ரி1)



வீட்டுத்தோட்டத்தை அபிவிருத்தி செய்யும் அரசின் கொள்கைக்கு அமைவாக முசலி பிரதேச செயலாளர் பிரிவில், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் தெரிவு செய்யப்பட்ட, நாற்று மேடை பயனாளிகளுக்கான விதைப்பொதிகள் வழங்கும் வைபவம், முசலி பிரதேச செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது. இதன்போது தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு முசலி பிரதேச செயலாளர் சி.ரஜீவ் விதைப்பொதிகளை வைபவ ரீதியாக வழங்கினார். (ந-56)

# விசேட சுற்றிவளைப்பு: 22 பேர் கைது



வவுனியா, ஒக்.3

வவுனியா பொலிஸார் நேற்று வெள்ளிக்கிழமை மாலை மேற்கொண்ட 3 மணிநேர திடீர் விசேட நடவடிக்கை யின்போது 22 நபர்களைக் கைதுசெய்துள்ளனர்.

"குற்றச்செயல்கள் அற்ற வவுனியாவை உருவாக்குவோம்" என்ற தொனிப்பொருளில் வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பீ.ஆர்.மானவடு அவர்களின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைக்கமைய வவுனியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பொலிஸார் இந்த விசேட நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

பெண்களுடன் பகிடிவதையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவர், வழிப்பறி மற்றும் கொள்ளை குற்றச்சாட்டில் இருவர், கேரளா கஞ்சாவுடன் நால்வர், ஹெரோய்னுடன் ஒருவர், நீதிமன்ற பிடியாணை உத்தரவில் இருவர், மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் இருவர், பொது மக்கள் நடமாடும் பகுதியில் மதுபானம் அருந்திய குற்றச்சாட்டில் நால்வர் மற்றும் சந்தேகத்தின் அடிப்படையில் ஆறு பேர் உட்பட 22 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட அனைவரும் வவுனியா பொலிஸ் நிலைய தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன், விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்துவதற்குரிய நடவடிக்கையினை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ந-18)

# சிறுவனின் கோரிக்கையை நிறைவேற்றினார் பிரதமர்



கொழும்பு, ஒக்.3

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நாரஹென்பிட்டி விகாரைக்கு சென்ற சந்தர்ப்பத்தில், சிறுவன் ஒருவன் கடிதம் மூலம் விடுத்த கோரிக்கையை நிறைவேற்றியுள்ளார். அந்தக் கடிதத்தில் தங்களுக்கு வீடு பெற்றுத்தருமாறு சிறுவன் கோரியுள்ளான். கடிதத்துக்கு உடனடியாக பதில் வழங்கிய பிரதமர், வீடு பெற்று தருவதாக வாக்குறுதியளித்துள்ளார்.

சிறுவனுடன் வந்த தாயை அழைத்து, வீட்டு அதிகார சபையின் தலைவரைச் சந்திக்குமாறு தெரிவித்துள்ளார். (க-இ)

# அரச உத்தியோகத்தருக்கு கொழும்பில் 608 வீடுகள்

கொழும்பு, ஒக்.3

கொழும்பில் அரச ஊழியர்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட வீட்டுத்தொகுதியை பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ, உரியவர்களிடம் கையளிக்கவுள்ளார். 5500 மில்லியன் ரூபா செலவில் பொரளை, வனாதமுல்லயில் நிர்மாணிக்கப்பட்ட ஓவல் வியு ரெசிடன்சி வீட்டுத் தொகுதி இவ்வாறு கையளிக்கப்படவுள்ளது.

நாளை மறுதினம் திங்கட்கிழமை இந்த வீட்டுத் தொகுதி கையளிக்கப் படும் என்று பிரதமர் செயலகம் அறிவித்துள்ளது.

முன் விற்பனை அடிப்படையில் நிர்மாணிக் கப்பட்ட இந்த வீட்டுத்தொகுதியில் 608 வீடுகள் உள்ளன. 3 படுக்கையறைகளைக் கொண்ட 304 வீடுகளும், 2 படுக் கையறைகளைக் கொண்ட 304 வீடுகளும் அமைக்கப்பட்டுள்ளன.


வாகன நிறுத்துமிடம், சிறுவர் பூங்கா, 2 உடற்பயிற்சி நிலையங்கள், வர்த்தகத் தொகுதி, நீச்சல் தடாகம் உட்பட பல்வேறு வசதிகளும் இதில் உள்ளடங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## கொட்டகலை பகுதியில்
# சிறுத்தைகளின் நடமாட்டம்: பெரும் அச்சத்தில் மக்கள்!

ஹற்றன், ஒக்.3

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகலை கிறிலஸ்பாம் பகுதியில் மக்கள் வாழும் பகுதியில் கடந்த சில காலமாக சிறுத்தைகளின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுவதனால் மக்கள் பெரும் அச்சத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன் வீட்டினுள் நுழைந்த சிறுத்தைகள் வீட்டில் வளர்க்கும் கோழிகளை, கோழிகூண்டினை உடைத்து கொண்டு செல்வதனை சி.சி.டி.வி கமராவில் பதிவாகியிருந்த நிலையில், நேற்றுமுன்தினம் இரவும் வீடுகள் நிறைந்த பகுதியில் சிறுத்தை ஒன்று வீட்டினுள் நுழைந்து வீட்டில் வளர்க்கப்பட்டு வந்த நாய் ஒன்றினை கவ்விச் செல்வது அந்த வீட்டில் உள்ள சி.சி.டி.வி கமராவில் பதிவாகியுள்ளது. அத்துடன் மக்கள் நடமாடும் பகுதியில் இரவு வேளையில் சிறுத்தைகள் வருகைதந்து கால்நடைகளைக் கொண்டுசெல்கின்றன.





தொடரும் இச் சம்பவங்களினால் பொதுமக்கள் உயிர்களுக்கும் சிறுத்தைகளின் உயிர்களுக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ள நிலையில், இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுகின்றனர். (ந)



# தீப்பற்றிய கப்பலை அகற்றுவதற்கு அனுமதி

கொழும்பு,ஒக்.3

தீ விபத்துக்குள்ளான எம்.ரி.நியூ டைமன்ட் கப்பலை இலங்கை கடற்பரப்பில் இருந்து அகற்றுவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கப்பல் நிறுவனத்துக்கு அதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று கடற்படை பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பணம் மற்றும் நஷ்டஈடு வழங்கும் ஒப்பந்தத்தின் அடிப்படையில், கப்பலை அகற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கப்பலை இலங்கை கடற்பரப்பில் இருந்து இழுத்துச் செல்லும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக தீப்பரவல் ஏற்பட்ட கப்பலால் ஏற்படும் கடல் மாசுபாட்டுக்கு உரிமை கோருவது தொடர்பான பேச்சுவார்த்தை இன்னும் நிறைவடையவில்லை என்று சட்டமா அதிபர் டப்புல்லா டி லிவேரா அறிவித்திருந்தார்.

எம்.இ.பி.ஏ என்ற கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணையகத்துக்கு இந்த விடயம் அறிவிக்கப்பட்டிருந்தது. கப்பலின் உரிமையாளர்களிடம் கோரப்பட்ட செலவு உரிமை கோரல்கள் இன்னும் தீர்க்கப்படவில்லை என்று கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணையகத்திடம் சட்டமா அதிபர் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து பேச்சு வார்த்தைகள் முடியும் வரை இலங்கை கடற்பரப்பை விட்டு வெளியேற, மசகு எண்ணெய் கப்பலுக்கு அனுமதி வழங்க முடியாது என்றும், கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணையகம் சட்டமா அதிபருக்கு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்தக் கப்பல் கடந்த மாதம் 3 ஆம் திகதி இலங்கை கடற்பரப்பில் தீ விபத்துக்குள்ளாகியமை குறிப்பிடத்தக்கது. (க-இ)



# மொறிசன் ஔடத உற்பத்தி நிலையம் திறந்து வைப்பு!

கொழும்பு, ஒக்.3

ஹோமாகம, பிடிபன ஸ்லின்டெக் வலயத்தில் நிறுவப்பட்டுள்ள மொறிசன் ஔடத உற்பத்தி மற்றும் பரிசோதனை நிலையத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச நேற்றுக் கலந்து கொண்டார்.



மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்காக 13.8 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்பட்டுள்ளது. இலங்கைக்கு ஆண்டுதோறும் 1.8 பில்லியன் மருந்து மாத்திரைகள் இறக்குமதி செய்யப்படுகின்ற நிலையில், இந்த உற்பத்தி நிலையத்தின் ஊடாக எதிர்காலத்தில் உள்ளூர் தேவையின் ஒரு பகுதியைப் பூர்த்தி செய்து கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்துக்கு அமைய உள்நாட்டு ஔடத உற்பத்தியை மேம்படுத்துதல் மற்றும் ஊக்குவிக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்படும் இந்த நிலையத்தின் ஊடாக எதிர்காலத்தில் வெளிநாடுகளின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையிலும் ஔடத உற்பத்தி இடம்பெறவுள்ளது. இதில் அமைச்சர்களான பந்துல குணவர்தன, பவித்ரா வன்னியாராச்சி, விமல் வீரவன்ச, காமினி லொகுகே, இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன, ஹேமாஸ் குழுமத்தின் தலைவர் ஹுசேன் யூஷுக் அலி, மொறிசன் குழுமத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் முரகாசா யூஷுக் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.(ற-இ)

# ஓட்டோ –பைக் விபத்து: பெண் வைத்தியசாலையில்

வவுனியா ஏ9 வீதியில் நேற்று இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற, முச்சக்கரவண்டி மோட்டார் சைக்கிள் விபத்தில் பெண்ணொருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா நகரிலிருந்து ஏ9 வீதியூடாக தாண்டிக்குளம் பகுதியினை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த முச்சக்கரவண்டி ஏ-9 வீதி விவசாயத்திணைக்களத்திற்கு முன்பாக வீதியின் மறுபக்கம் திரும்ப முற்பட்ட சமயத்தில், முச்சக்கரவண்டிக்கு பின்பக்கமாக வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் முச்சக்கரவண்டியுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில் இரு வாகனங்களும் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், மோட்டார் சைக்கிளின் சாரதியான 35 வயது மதிக்கத்தக்க பெண் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந-18)



# அமெரிக்க அரசிடம் புலமைப்பரிசில் கோரல்

கொழும்பு,ஒக்.3

இலங்கை மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டங்களுக்கு ஆதரவளிக்குமாறு, அமெரிக்க அரசிடம் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன கோரியுள்ளார்.

இலங்கையில் உள்ள அமெரிக்க தூதர் எலைய்னா பி டெப்லிஸிடன் இடம்பெற்ற சந்திப்பில் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

உயர்கல்வி மற்றும் வணிக வாய்ப்புகள், இலங்கையில் மென்பொருள் பொறியியல் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

இதேவேளை, இலங்கையில் இருந்து அமெரிக்காவுக்கான ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான சாத்தியம் தொடர்பில், அமெரிக்க தூதுவர் கலந்துரையாடினார் என்று இலங்கையின் வர்த்தக அமைச்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(க-இ)

# 'பாதையில் குப்பை போட வேண்டாம்' விசேட வேலைத்திட்டம் கிழக்கில்

மட்டக்களப்பு, ஒக்.3

'சேர்ந்து காப்போம் கிழக்கு' என்னும் தொனிப்பொருளில் "பாதையில் குப்பை போட வேண்டாம்" எனும் விசேட வேலைத் திட்டம் கிழக்கு மாகாணத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.



ஓட்டமாவடி பிரதேச சபை செயலாளர் எஸ்.எம்.சிஹாப்தீன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த விசேட வேலைத் திட்டத்தை ஓட்டமாவடி பிரதேச சபையினர் மற்றும் கிழக்கு மாகாண இராணுவனத்தினர் இணைந்து ஓட்டமாவடி பிரதான சந்தியில், ஆரம்பித்து வைத்தனர்.

இதன்போது முச்சக்கரவண்டிகளுக்கு, 'சேர்ந்து காப்போம் கிழக்கு' என்னும் தொனிப்பொருளில் "பாதையில் குப்பை போட வேண்டாம்" என்னும் வாசகம் பொறிக்கப்பட்ட ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டன.

வீதிகளில் பொதுமக்கள் குப்பைகளைக் கொட்டுவதை நிறுத்தி, அதை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதுடன், எமது நாட்டையும், பிரதேசத்தையும் சுத்தமாகப் பேணுவது ஜனாதிபதியின் கொள்கைத் திட்டமாக இடம்பெற்று வருகின்றது என்று ஓட்டமாவடி பிரதேச சபை செயலாளர் எஸ்.எம்.சிஹாப்தீன் தெரிவித்தார். (ற-150)





# உருத்திரபுரத்தில் காந்தியடிகளின் ஜெயந்தி தினம்

கிளிநொச்சி, ஒக்.3

மகாத்மா காந்தியடிகளின் 151 ஆவது ஜெயந்தி தினம் மற்றும் சர்வதேச அகிம்சை தின நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி உருத்திரபுரத்தில் அமைந்துள்ள காந்தி நிலையத்தில் காந்தி சிறுவர் இல்லம் தலைவரும் கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் அதிபருமான கி.விக்னராஜா தலைமையில் இடம்பெற்றது .

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்திய சாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ந.சுந்தரமூர்த்தி கௌரவ விருந்தினராக கிளி/பன்னங்கண்டி அ.த.க பாடசாலை அதிபர் திருமதி ஜெயராணி லோகநாகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் நிலைய செயலாளர் செல்வராணி சோமசேகரம் பிள்ளை வரவேற்புரையினையும், ஆசிரியர் எம்.ஷாந்தன் சத்திய கீர்த்தி காந்தீயம் பத்திரிகையின் அறிமுகவுரையினையும் சங்கத்தின் பொதுச் செயலாளர் செ. சுப்பிரமணியம் நன்றியுரையையும் நிகழ்த்தினர். காந்திஜியின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டு சிறுவர் இல்ல மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. காந்தீயம் பத்திரிகையை எம்.சாந்தன் சத்திய கீர்த்தி வெளியிட கிளிநொச்சி கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ந.சுந்தரமூர்த்தி அதனைப் பெற்றுக்கொண்டார். (ந-159)

# கல்வியில் சீர்திருத்தம் உடனடியாக அவசியம்

## பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.4

பிள்ளைகள் சுதந்திரமாக, மன மகிழ்வுடன் கல்வி கற்கக் கூடிய கல்விச் சீர்திருத்தமொன்று நாட்டுக்கு உடனடியாகத் தேவைப்படுவதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

'அபேகம' வளாகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சர்வதேச சிறுவர் தின தேசிய நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

"அரசியலமைப்பு சீர்திருத்தத்தை விட கல்விச் சீர்த்திருத்தம் இந்த நாட்டின் எதிர்காலத்தில் தாக்கம் செலுத்துகின்றது. நாம் கல்விக்கு தேசிய வருவாயிலிருந்து எவ்வளவு தொகையை ஒதுக்கினாலும், பிள்ளைகளுக்கு கல்விச் சுதந்திரம் இல்லையேல் அதனால் பயனற்றுப் போகும்.

அத்துடன், அனைத்து விடயங்களையும் மீண்டும் கட்டியெழுப்பும் யுகமொன்று மீண்டும் உருவாகியுள்ளது. வீட்டின் பின்புறத்தில் விளையும் மஞ்சள் செடி முதல், மாணவர்கள் பாடசாலைக்கு அணியும் சீருடை வரை நாமே உற்பத்தி செய்துகொள்ளும் யுகமொன்று தோற்றம் பெற்றுள்ளது -என்றார். (ற-இ)






# துப்பாக்கியுடன் முதியவர் கைது

கொழும்பு,ஒக்.3

ரிபீடர் ரக துப்பாக்கி மற்றும் அதற்கு உபயோகப்படுத்தும் 5 ரவைகளுடன் முதியவர் ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

மீரிகம நாராதெணிய தங்ஓவிடப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் 70 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-இ)




# காங்கேசன்துறை லயன்ஸ் கழக பதவியேற்பு

யாழ்ப்பாணம், ஒக்.3

காங்கேசன்துறை லயன்ஸ் கழகத்தின் 2020 -2021 காலப்பகுதிக்குரிய நிர்வாகிகள் பதவியேற்பு நிகழ்வு அண்மையில் கழக மண்டபத்தில் நடைபெற்றது.

கழகத் தலைவர் கா.பீ.ஜெயவிந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக பன்னாட்டு லயன்ஸ் கழகங்களின் 306 பி1 மாவட்ட ஆளுநர் லயன் பீற்றர் தேவா கலந்துகொண்டார்.

கழகத்தின் நலனோம்பு செயற்றிட்டத்தின்கீழ் பிரதேசத்தில் பொருளாதார நிலையில் பின்தங்கிய பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு தலா இரண்டாயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவு பொருள்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் நீர்கொழும்பு ஒரியன் லயன்ஸ் கழகத்தினர் சார்பில் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவனுக்கும் முதியவருக்கும் காது கேட்கும் கருவிகளும் வழங்கப்பட்டன. (ந9)

# தமிழ் பிரதிநிதிகள் மௌனிகளாக உள்ளமை எம் இனத்தை மேலும் கொச்சைப்படுத்துகிறது

## தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் விசனம்

யாழ்ப்பாணம், ஒக்.3

ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல திலீபன் மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்பில் தெரிவித்த கருத்துக்களுக்கு பெரும் கண்டனத்தைத் தெரிவிப்பதுடன், அவர் கருத்துக்கள் சொல்லும்போது அவர் பக்கத்தில் இருந்த தமிழ் பிரதிநிதிகள் பதவிக்காக மௌனிகளாக புன்சிரிப்புடன் இருந்தமை தான் எமது இனத்தை மேலும் கொச்சைப்படுத்துவதாக அமைந்தது என புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் க.இன்பராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தியாகி திலீபன் ஒரு பயங்கரவாதியெனவும், அவரை போதைப்பொருள் ஆட்களுடன் இணைத்துப் பேசுவதென்பது நொந்து கிடக்கும் எமது மக்களை மேலும் நோகடித்து எமது வரலாற்றைக் கொச்சைப்படுத்தும் செயற்பாடகவே எம்மால் பார்க்க முடிகின்றது. அத்துடன் காணாமல் போனவர்கள் பற்றிக் குறிப்பிட்ட கருத்தானது எமது உறவுகளை வஞ்சிக்கின்றது. எமது மக்கள் இறுதி யுத்தத்தின்போது தாங்கள் இராணுவத்திடம் ஒப்படைத்த உறவுகள் எங்கே என்றுதான் கேட்கின்றார்கள். இதற்கு பதில் சொல்ல முடியாமல் வெவ்வேறு விடயங்களைச் சுட்டிக்காட்டி எமது மக்களின் கண்ணீரைக் கொச்சைப்படுத்த நினைப்பது எந்தவிதத்தில் நியாயம்?.

ரம்புக்வெல இன்று நேற்றல்ல இறுதி யுத்தம் நடைபெறும் போதும் கூட அவரது துவேச கருத்தக்களைக் கக்கிக்கொண்டே இருப்பவர். அதற்காக தமிழ் மக்களின் உரிமைக்காக அகிம்சை வழியில் உண்ணா நோன்பிருந்து இன்னுயிரை நீத்த தியாகத்தையும், போதைப்பொருள் கடத்தல்காரர்களையும் தொடர்புபடுத்தி கருத்துக்கள் வெளியிடுவதென்பது தமிழ் மக்களின் வரலாற்றை மறைக்க முயற்சிக்கும் செயலாகும். இதனை மக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

ஒரு சிங்கள அரசியல்வாதிதான் அவ்வாறு சொல்கிறார் என்றால் முழுக்க முழுக்க தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று அரசாங்கத் துடன் ஒட்டிக் கொண்டிருக்கும் அரசியல்வாதிகள், பதவிக்காக இதனைக் கேட்டுச் சிரித்துக் கொண்டிருப்பதானது அவர்களின் ஈனத்தனத்தையே வெளிக்காட்டுகின்றது. இவ்வாறானவர்களை மக்கள்தான் இனங்கண்டுகொள்ள வேண்டும். இவர்கள் போன்றோருக்குத் தானா நாங்கள் வாக்களித்தோம் என்று அவர்களுக்கு வாக்களித்த ஒவ்வொருவரும் வெட்கித் தலைகுனிய வேண்டும்.

இதனை ஒருபோதும் முன்னாள் போராளிகளாகிய நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. ஏதோவொரு வகையில் தமிழர்களின் போராட்டத்திற்கு ஆண்டாண்டு வந்த அரசாங்கங்களே காரணமாக இருந்திருக்கின்றன. அத்தகு நிலையில் சொந்த மண்ணிலே எமது உரிமைக்காக போராடிய ஒவ்வொரு தமிழ் மகனும் என்றும் நினைவு கூரப்படவேண்டியவர்களே. அதனை எவரும் தடுக்க முடியாது.

அபிவிருத்தியுடன் சேர்த்து மக்களின் உரிமைக்காவும் குரல் கொடுப்போம் என்று மக்களிடம் வாக்குக் கேட்ட அரசுடன் சேர்ந்திருக்கும் தமிழ்ப் பிரதிநிதிகளுக்கு மக்களின் பிரச்சினைகளை விட அவர்களின் பதவிகளைத் தக்க வைப்பதற்கு என்ன வேண்டுமோ அதனையே அவர்கள் செய்து வருகின்றார்கள். நேற்றைய தினம் ஊடக சந்திப்பின்போது அமைச்சர் மட்டுமல்ல அமைச்சருடன் அருகில் அமர்ந்திருந்த இராஜாங்க அமைச்சர் மற்றும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோரும் சேர்ந்து எமது போராட்டத்தையும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்தையும் கொச்சைப்படுத்தியுள்ளார்கள் என்று தெரிவித்தார். (ந-156)

# கட்டுத்துவக்கு வெடித்து குடும்பப்பெண் உயிரிழப்பு

கொழும்பு,ஒக்.3

கரும்பு செய்கையை மிருகங்களிலிருந்து பாதுகாப்பதற்காக புதைக்கப்பட்ட கட்டுத் துவக்கு தவறு தலாக வெடித்ததில், குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள் ளார்.

இந்தச் சம்பவம் சியம்பலாண்டுவ புறநகர் பிரதேசமான ஹெலமுல்ல பிரதேசத்தில் நடந்துள்ளது.

கரும்பு தோட்டத்தை காட்டு மிருகங்களிடமிருந்து பாதுகாப்பதற்காக, புதைக்கப்பட்டிருந்த கட்டுத்துவக்கு தவறுதலாக, காலில் மிதிபட்டு வெடித்ததில் அவர் உயிரிழந்துள்ளார்.

அவர் உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதும், சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவர் சியம்பலாண்டுவ,ஹெலமுல்லப் பகுதியைச் சேர்ந்த ஆர்.எம்.பிரேமாவதி (52)எனும் நான்கு பிள்ளைகளின் தாயாவார்.

அதேவேளை இறந்தவரின் கணவர் சட்டவிரோத கட்டுத்துவக்குப் பயன்படுத்தியதில், பாதத்தை இழந்தவர் எனத் தெரியவந்துள்ளது.(க-இ)

# ஏப்ரல் 21 தாக்குதல் விசாரணைகள் முடிவு?

கொழும்பு,ஒக்.3

ஏப்ரல்- 21 தாக்குதல் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகள், இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன என்று பொலிஸ் பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்டு, தடுத்து வைத்து விசாரணைக்கு உள்ளாக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் றிசாட் பதியுதீனின் சகோதரர் விடுவிக்கப்பட்டமை தொடர்பில்,கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த பொலிஸ் பேச்சாளர், ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில், அவர் 5 மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டு, விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டார்.

எனினும், குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளின் போது, அவருக்கு எதிராக வழக்கு தொடர்வதற்கான போதுமான சாட்சியங்கள் கிடைக்கப்பெறவில்லை. அவர் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளார். விசாரணைகள் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன. எனினும் நிறைவடையவில்லை. என்றார்.(க-இ)

# மார்பக புற்றுநோயால் வருடாந்தம் 700 பேர் சாவு

கொழும்பு,ஒக்.3

இலங்கையில் ஒவ்வொரு வருடமும், மார்பகப் புற்றுநோய் காரணமாக, சுமார் 700 பேர் வரை உயிரிழக்கின்றனர் என்று தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் சமூக விசேட மருத்துவ நிபுணர் சுராஜ் பெரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, வருடாந்தம் நாட்டில் 3 ஆயிரத்து 500 மார்பக புற்றுநோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர்.

தினசரி 9 10 வரையான பெண்கள் மார்பக புற்றுநோயுடன் அடையாளம் காணப்படுகின்றனர். 50 வயதுக்கு அதிகமானவர்கள் அல்லது அந்த வயதுக்கு அண்மைய வயதுகளில் இருக்கும் பெண்களே மார்பக புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர்.

உலகளவிலும் பெண்கள் எதிர்கொள்ளும் பொதுவான ஆபத்தாக மார்பக புற்றுநோய் அமைந்துள்ளது. சுகாதாரத்துறையினால் வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம், அறிகுறிகளைக் கவனித்து நோயின் ஆரம்பகட்டத்திலேயே விழிப்படையுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். என்றார். (க-இ)

# காற்றின் வேகம் அதிகரிக்கும்

கொழும்பு,ஒக்.3

ஹம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையான கடலோர பகுதிகளிலும், ஆழ்கடல் பகுதிகளிலும் காற்றின் வேகமானது மணிக்கு 60 தொடக்கம் 70 கிலோ மீற்றர் வேகத்தில் வீசக் கூடும்.

இதன் காரணமாக இடைக்கிடையே கடல் கொந்தளிப்புடன் காணப்படும்.

எனவே, கடற்றொழிலில் ஈடுபடுவோர், இது தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

# ஹெரோய்ன் கடத்தல்: ஏழு பேர் கைது

புத்தளம், ஒக்.3

புத்தளம் தங்கொழுவ கொஸ்வத்தை பகுதியில் 15 கிலோகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதோடு, 7 சந்தேக நபர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட ஹெரோய்ன் 15 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடையது எனத் தெரியவருகின்றது. போதைப்பொருள் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ற-இ)



# சைலன்ஸ்

திரைவிமர்சனம்

தியேட்டர்கள் மூடப்பட்டு இருப்பதால் ஓடிடியில் வெளியாகி உள்ள மற்றுமொரு படம் இந்த சைலன்ஸ்.

ஒரு கொலையை யார் செய்தார்கள்?, எதற்காக செய்தார்கள், அதன் பின்னணி என்ன என்பதைச் சொல்லும் படமே 'சைலன்ஸ்' 'சைலன்ஸ்' படத்தின் தொடக்கத்தில் ஒரு வீட்டில் இரண்டு மர்மமான கொலைகள் நடக்கின்றன. உடனே, அது பேய்வீடு என்று யாருமே போக மறுக்கிறார்கள். பல ஆண்டுகள் கழித்து அந்த வீட்டை வாடகைக்கு விடுகிறார்கள். அந்த வீட்டின் கீழ்ப் பகுதியில் ஒரு ஓவியம் இருப்பதை எடுக்க மாதவன் மற்றும் அனுஷ்கா வருகிறார்கள். இருவருக்கும் விரைவில் திருமணம் நடைபெறவுள்ளது.

அனுஷ்காவுக்குத் தேவையான அந்த ஓவியத்தை எடுக்க வந்த இடத்தில் மாதவன் கொல்லப்படுகிறார். அனுஷ்கா தப்பித்துவிடுகிறார். உண்மையில், அந்த வீட்டில் மர்மமான கொலைகளுக்கு யார் காரணம், மாதவன் ஏன் சாகடிக்கப்படுகிறார் என்பது தான் திரைக்கதை.

காது கேட்காத, வாய் பேச முடியாத மாற்றுத் திறனாளி கதாபாத்திரத்தில் அனுஷ்கா சுமாராகவே நடித்துள்ளார்.



படம் முழுக்க பாதி தூக்கத்திலிருந்து எழுந்து வந்த மாதிரியே தான் இருக்கிறார். படத்தில் இவருடைய நடிப்புத் தான் கொஞ்சம் பரவாயில்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு மற்றவர்களின் நடிப்பு இருந்தது. இந்தக் கதையில் மாதவன் ஏன் நடிக்க ஒப்புக் கொண்டார் என்பது புரியாத புதிராக இருக்கிறது. அஞ்சலி மற்றும் மைக்கேல் மாட்ஸன் இருவரின் நடிப்பு ரொம்ப செயற்கையாக இருந்தது. ஒளிப்பதிவாளர் ஷானியல் டியோ, இசையமைப்பாளர் கிரிஷ் இருவருடைய பணிகள் கதைக்குப் பொருத்தமாக உள்ளது.

ஒரு ஹாரர் படமாகத் தொடங்கி, உளவியல் த்ரில்லரா என்று யோசிக்க வைத்து 2 மணி நேரம் படம் பார்த்தவர்களைச் சோகத்தில் ஆழ்த்துகிறது. பல ஹாலிவுட் படங்களின் பாதிப்பில் எடுக்கப்பட்டுள்ள முதல் காட்சி மாதிரியே இன்னும் பல காட்சிகளை எடுத்திருந்தால் தொழில்நுட்ப ரீதியில் சிறப்பான ஒரு படத்தை பார்த்த திருப்தியாவது கிடைத்திருக்கும். ஆனால் முதல் காட்சியைத் தாண்டி வேற எதுவுமே இயக்குநர் ஹேமந்த் மதுகரால் பார்வையாளர்களை ஈர்க்க செய்யவில்லை எனத் தோன்றுகிறது. படத்தில் பல கதாபாத்திரங்கள் பார்வையாளர்களுக்குச் சந்தேகம் வரவைக்கத் திணித்துள்ளார். ஆனால், படமாக அது எந்தவொரு பாதிப்பையும் உருவாக்கவில்லை என்பது தான் பிரச்சினை.

எதற்காக அமெரிக்காவில் இந்தப் படத்தை எடுக்க வேண்டும், அஞ்சலியின் ஆங்கிலப் பேச்சு, மைக்கேல் மாட்ஸன் நடிப்பு என சில விடயங்கள் புரியாத புதிராகவே இருக்கிறது.

ஒரு காட்சியை எப்படி எடுக்க வேண்டும் என இயக்குநருக்கு தெரிந்துள்ளது. ஆனால், போலித்தனமாக நிற்பது, நடப்பது, பேசுவது, நடிப்பது உள்ளிட்டவற்றை அவர் கவனிக்கவில்லை. படத்தின் கதையோட்டத்தில் நிறைய லாஜிக் குறைகள் வேறு உள்ளன. அனைத்தை யும் தாண்டி க்ளைமாக்ஸ் காட்சி சரிசெய்யும் என்று பார்த்தால், அதுவும் புரியாத புதிராகவே உள்ளது. மொத்தத்தில் இந்த சைலன்ஸ் படம் ஓடிடி தளத்தில் வெளியாகியுள்ள இன்னொரு அபத்தமான படம்.





# தெம்பு தரும் செல்லப் பிராணிகள்!

ஊரடங்கு காலத்தில், உளவியல் சமநிலை குலைதல், தனிமை உணர்வு மேலோங்குதல் போன்ற தொந்தரவுகளை பலரும் அனுபவித்து வருகின்றனர்.இந்த நிலையை மாற்ற, செல்லப்பிராணிகள் உதவும் என, பிரிட்டனைச் சேர்ந்த யார்க் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் அண்மையில் கண்டறிந்துள்ளனர்.

பிரிட்டனில், 'கொவிட் 19' பரவலை ஒட்டி, ஊரடங்கில் இருந்த, 6 ஆயிரம் பேரிடம், யார்க் ஆராய்ச்சியாளர்கள் கருத்துகளை கேட்டறிந்தனர். இதில் வீட்டில் செல்லப் பிராணிகள் வளர்ப்போர் மற்றும் எந்த வகை பிராணிகளையும் வளர்க்காதோரும் அடக்கம்.ஆய்வின் முடிவில், ஊரடங்கால் வீட்டிற்குள் அடைந்து கிடக்கும்போது, நாய், பூனை, குதிரை என்று வீட்டில் செல்லப் பிராணிகளுடன் அதிக நேரம் செலவிட்டவர்களுக்கு, எவ்வித உளநிலை பாதிப்பும் ஏற்படவில்லை என்று தெரிய வந்தது. மாறாக, அவர்கள் நல்ல மனப்பாங்குடன் இருப்பதும் தெரிய வந்தது.அதேபோல, பிராணி வளர்ப்போரிடம், தனிமை உணர்வும் குறைவாகவே இருந்ததாகவும் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர். இந்த ஆய்வு, 'பிலோஸ் ஒன்' என்ற ஆய்விதழில் வெளியாகியுள்ளது.

# கொரோனாவால் வளர்ந்த நாடுகளின் பொருளாதாரம் கடுமையாகப் பாதிப்பு



நியூயோர்க், ஒக்.2

கொரோனாத் தொற்று காரணமாக வளர்ச்சியடைந்த நாடுகள் கடுமையான பொருளாதாரப் பாதிப்பைச் சந்தித்துள்ளன என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் தலைவர் அன்டோனியோ குட்ரஸ் இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது, வளர்ந்த நாடுகள், பல மாதங்களாக நிலவும் கொரோனாத் தொற்றுக் காரணமாக கடுமையான பொருளாதாரப் பாதிப்பைச் சந்தித்துள்ளன. இதனைச் சரிசெய்ய அமெரிக்கா, ஐரோப்பா, கனடா ஆகிய நாடுகள் தங்கள் நாட்டின் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க உள்ளன. ஆனால், வளரும் நாடுகளில் உற்பத்தியை அதிகரிக்க வளங்களைத் திரட்டுவதே பிரச்சினையாக உள்ளது எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)



# பளுதூக்கலில் ஆசிகா சாதனை

யாழ்ப்பாணம், ஒக்.3

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்திய பெண்களுக்கான பளுதூக்கலில் விஜயபாஸ்கர் ஆசிகா 7 ஆவது தடவையாகவும் வடக்கு மாகாண சிறந்த விளையாட்டு வீராங்னையாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் போட்டி யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கிலுள்ள பளுதூக்கல் திடலில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் 71 கிலோ எடைப் பிரிவில் விஜயபாஸ்கர் ஆசிகா சினெச் முறையில் 75 கிலோ பளுவையும், கிளின் அன் ஜக் முறையில் 95 கிலோ பளுவையும் தூக்கிச் சாதனை படைத்துள்ளார். 170 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தை வென்று வடக்கு மாகாணத்தின் சிறந்த வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் வடக்கு மாகாணத்தின் சிறந்த வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்டதோடு, கடந்த வருடம் நடைபெற்ற தெற்காசிய நாடுகளுக்கிடையிலான பெண்களுக்கான பளு தூக்கல் போட்டியில், இலங்கை சார்பாகக் கலந்து கொண்டு வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுள்ளார். (ற-422)



# அல்வாய் நக்கீரன் அணி சம்பியன்

கரவெட்டி, ஒக்.3

கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டத்தில் அல்வாய் நக்கீரன் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

இதன் இறுதியாட்டம் நேற்று வெள்ளிக்கிழமை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் அல்வாய் நக்கீரன் அணியை எதிர்த்து கூவில் தீபஜோதி அணி மோதியது. ஆட்டத்தின் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய அல்வாய் நக்கீரன் அணி 11:6 என்ற கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.(ற-422)

# கபடியில் பச்சிலைப்பள்ளி பிரதேச அணி சம்பியன்

கிளிநொச்சி, ஒக்.3

கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாவட்ட ரீதியிலான கடற்கரைக் கபடிப் போட்டியில், பச்சிலைப்பள்ளிப் பிரதேச அணி கிண்ணம் வென்றது. இந்தப் போட்டி மாவட்ட விளையாட்டு அதிகாரி தலைமையில், பளை அதிசயம் விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இறுதிப் போட்டியில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச அணியை எதிர்த்து கரைச்சிப் பிரதேச அணி மோதியது.



இதில் 44:24 என்ற கணக்கில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச அணியினர் வெற்றி பெற்று, இந்த ஆண்டுக்கான கடற்கரைக் கபடிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டனர்.

இதேவேளை பெண்களுக்கான கபடிப் போட்டியும் இடம்பெற்றது. இறுதிப் போட்டியில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச அணியினரும், கரைச்சிப் பிரதேச அணியினரும் மோதினர். இதில் கரைச்சிப் பிரதேச அணி 25:16 என்ற கணக்கில் வெற்றிபெற்றது. (ற-6)

# நாளைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.3

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம், யாழ்ப்பாண மாவட்ட அணிகளுக்கிடையே நடத்தும் "யாழின்நாயகன்" கால்பந்தாட்டத் தொடர் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வதிரி பொம்பேர்ஸ் அணியை எதிர்த்து அராலி மாவத்தை அணியும், 4 மணிக்கு புங்குடுதீவு சென்சேவியர் அணியை எதிர்த்து யாழ். ஐக்கியம் அணியும், 5 மணிக்கு பலாலி விண்மீன் அணியை எதிர்த்து புங்குடுதீவு பாரதி அணியும் மோதவுள்ளன. (ற-422)

# ட்விட்டரில் ட்ரெண்டாகும் ரெய்னா



சென்னை சூப்பர் கிங்ஸ் அணி இந்த ஐபிஎல் தொடரில் மோசமான தொடக்கத்தை எதிர்கொண்டுள்ளது.

இந்த நிலையில் ரெய்னா சிஎஸ்கே அணிக்குத் திரும்ப வர வேண்டும் என அவரது ரசிகர்கள் சமூக வலைதளங்களில் பதிவிட்டு வருகின்றனர்.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணி, தான் சந்தித்த முதல் போட்டியில் மட்டுமே வெற்றி பெற்றிருக்கிறது. அடுத்து ராஜஸ்தான் றோயல்ஸ், டெல்லி கெப்பிடல்ஸ் அணிகளுடன் விளையாடியதில் தோல்வியைச் சந்தித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து சிஎஸ்கே அணியின் பவுலிங் மற்றும் பேட்டிங்கில் அணி நிர்வாகம் கவனம் செலுத்த வேண்டும் என்று ரசிகர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

அந்த வகையில் சிஎஸ்கே அணியிலிருந்து விலகிய ரெய்னா அணிக்குத் திரும்பினால் அணி பலமாக இருக்கும் என்று அவரது ரசிகர்கள் ட்விட்டரில் #ComeBackRaina என்ற ஹேஷ்டேகுடன் பதிவிட்டு வருகின்றனர். அப்பதிவுகள் தற்போது ட்ரெண்டாகி வருகின்றன.

சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து கடந்த மாதம் 15ஆம் திகதி ஓய்வு பெற்ற சுரேஷ் ரெய்னா, தனிப்பட்ட காரணங்களால், ஐபிஎல் தொடரிலிருந்து விலகினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்சால் 03.10.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.